**தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2013**

-----------------------------------------------------------------------------------

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 5 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 61 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 1994 இன் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளைக் கோவையின் 12 ஆம் இலக்க கட்டளையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மேற்கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரைப்படக் கூட்டுத்தாபனத்திடமிருந்து திரைப்பட வாடகைப் பங்களிப்பாக கிடைக்கவேண்டிய தொகை கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், வருமானக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக தற்காலிகமாக கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைத்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. இப்பணம் எச்சந்தர்ப்பத்திலும் தீர்க்கப்படாதிருந்த போதிலும் தொடர்ச்சியாகக் காணப்பட்ட கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கணக்குகளின் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதியில் முறையே ரூபா 12,573,744 மற்றும் ரூபா 20,506,930 ஆக இருந்தன. இந்த வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு உரிய ஆண்டுகளின் வருமானம் அந்தந்த வருடங்களின் போது இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் இவ்வாறு கடன்கொடுத்தோர் கணக்கில் செலவு வைக்கப்பட்ட வருமானம் ரூபா 1,655,486 ஆக இருந்தது.

(ஆ) வெளிநாட்டு திரைப்பட தயாரிப்பு கண்காணிப்பிற்கான வருமானம் மற்றும் செலவினம் முறையே ரூபா 818,500 மற்றும் ரூபா 677,125 என வெவ்வேறாக இனங்காணப்படாமல் தேறிய மீதி மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டின் இலாபத்தில் சீராக்க முடியாத 03 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,042,355 செலவு வைத்ததன் மூலம் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 1,042,355 இனால் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றின்மை

கீழே குறிப்பிடப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) செலுத்தவேண்டிய உற்பத்திக் கணக்கில் ரூபா 1,477,210 தொகையான மீதிக்குரிய பயன்பாட்டு ஆவணங்கள் மற்றும் எனைய பட்டோலைகள்.

(ஆ) 2012 அம் ஆண்டின் போது செலுத்தவேண்டிய ரூபா 999,315 தொகையான வருமான வரி நிறுத்திவைத்தல் வரிகளில் ஈடுசெய்யப்பட்டிருந்த போதிலும் வரி கணிப்பிடல் விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் திரைப்படத் தயாரிப்புக் கடன்பட்டோர் மீதி ரூபா 64,682,582 ஆக இருந்ததுடன் அம் மீதியில் 99.8 சதவீதம் அதாவது ரூபா 64,554,331 தொகை ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மீதியாகும். திரைப்படத் தயாரிப்பிற்காக வழங்கிய கடன் பணத்திற்காக எத்தொகையும் மீளாய்வாண்டின் போது மீளப் பெறப்படாதிருந்ததுடன் திரைப்படத் தயாரிப்புக் கடன் மீதியில் அறவிட முடியாததாக மதிப்பிடப்பட்ட கடனின் அளவு ரூபா 60,784,558 அதாவது 94 சதவீதமாக இருந்தது.

(ஆ) நிதியத்தைப் பேணுவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் திரைப்படங்களிலிருந்து திரைப்படக் கூட்டுத்தாபனம் அறவிட வேண்டிய கூட்டுத்தாபன நம்பிக்கைப் பொறுப்பில் 20 சதவீதம் நிதியத்திற்கு வழங்கப்பட்டபோதும் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிதியத்திற்கு கிடைக்கவேண்டியதாகக் காணப்பட்ட திரைப்பட வாடகைப் பங்களிப்பு ரூபா 20,506,930 அக இருந்தது.

(இ) பழுதுபார்த்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பாக 3 சினிமா அரங்குகளுக்கு வழங்கப்பட்ட கடன் மற்றும் அவற்றிற்குரிய வட்டியில் 2013 சனவரி 01 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா 13,663,380 ஆக இருந்தது. அக்கடனுக்காக மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு மீளக் கிடைத்த தொகை ரூபா 566,614 அதாவது 04 சதவீதமாக இருந்தது. 02 சினிமா அரங்குகளிலிருந்து கடன் தவணைப் பணம் எதுவும் அறவிடப்படவில்லை.

(ஈ) நிதியத்தால் தயாரிக்கப்பட்டு திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்யப்பட்ட திரைப்படத்திலிருந்து 2005 ஆம் ஆண்டு முதல் அறவிடவேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 3,547,454 தொகை திரைப்படக் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க திரைப்பட அபிவிருத்தி நிதியம் தொடர்பான வர்த்தமானியின் கட்டளை இலக்கம் 6(இ) | வழங்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டால் அதற்காக அறவிடப்பட வேண்டிய தண்டப்பணம் நிச்சயிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய போதிலும் அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ஆ) 2000 யூன் 12 ஆந் திகதிய பீஎப்/பீஈ/09 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கை | 2000 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,000,000 பெறுமதி மற்றும் மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 5,500,000 தொகையான நிலையான வைப்பிற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னரான ரூபா 4,635,230 மிகையை விளைவித்திருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான மிகை ரூபா 4,996,573 ஆனமையால் மிகையில் ரூபா 361,343 அல்லது 7 சதவீத வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1994 இன் 1 ஆம் இலக்க தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளைக் கோவையின் 4 ஆம் இலக்கக் கட்டளையின் கீழ் (அ) தொடக்கம் (ஓ) வரையிலான அபிவிருத்தி நிதியத்தின் கடமைகளில் எதுவுமே 2013 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திரையரங்கு ஒன்றிற்கு வழங்கிய கடன் மற்றும் அதற்கான வட்டியான ரூபா 2,355,959 தொகையிலிருந்து எதுவித கடன் தவணையோ அல்லது வட்டிப் பணமோ மீள அறவிடுவதற்கு நிதியம் எவ்வித சட்டபூர்வ நடவடிக்கையும் எடுக்கப்படாது மொத்தத் தொகையும் அறவிடப்பட முடியாததாக மதிப்பிடப்பட்டு கடன்பட்டோர் மீதியிலிருந்து அதனைக் கழித்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. அக்கடன் தொகையானது குறித்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் 2007 ஆம் ஆண்டின் போது இந்தியாவின் தனியார் இரசாயனக்கூடம் ஒன்றுடன் இணைந்து திரைப்படம் ஒன்றை தயாரிப்பதற்கு செய்வதற்குத் திட்டமிட்டு ஆரம்பச் செலவினமாக ரூபா 200,000 தொகையைச் செலவிட்டிருந்த போதிலும் தயாரிப்பாளர் ஒருவரைத் தேட முடியாமையின் காரணமாக தயாரிப்பை கைவிட்டு அத்தொகை நிதியத்தின் திரைப்படக் கையிருப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டும் உள்ளடக்கப்படும் வகையில் கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்திற்கான பாதீடொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் அறவீடு
(ஆ) மிகை அறவீடு